10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 02 அதிர்வு 23 புதன்கிழமை 23 மே 2018 @gmail.com 021 224 38 18

## வடக்கில் கரண்ட் கட்

கொழும்பு,மே 23

வடக்கு மாகாணம் முழுவதும் வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய் இரண்டு தினங்களும் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மின் விநியோகம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம் வவுனியா, மன்னார் மின்மார்க்கத்தில்

06▶



## தூத்துக்குடியில் சூடு: 18 பேர் பலி

தூத்துக்குடி,மே.23

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக போராட்டம் நடத்தியவர்கள் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 6 பெண்கள் உட்பட 18 பேர் பலியாகியுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

அதேவேளை, 10க்கும் மேற்பட்ட பொலிஸார் உட்பட 50 பேர் வரை காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் பல்வேறு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

06▶

## தொடர்ந்து சீண்டினால் கடந்தகாலம் தூசு தட்டப்படும்

### மனோவுக்கு சிவாஜி எச்சரிக்கை




வவுனியா,மே 23

அமைச்சர் மனோகணேசன் தொடர்ந்து என்னை சீண்டினால், அமைச்சரின் கடந்த காலங்களை நான் தூசு தட்டுவேன்.

மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்களில் ஒருவராக அவர் இருப்பதனால், அரசியல் நாகரிகம் இன்றி அவரை விமர்சித்தால், அது மலையக

06▶



## கோமாவில் சம்பந்தன்

### சிவசக்தி ஆனந்தன் குற்றச்சாட்டு

வவுனியா, மே 23

தெற்கிலிருப்பவர்கள் நிதியையும் தருகிறார்கள் இல்லை, உரிமையையும் தரமறுக்கிறார்கள், இறந்தவர்களை நினைவு கூரவும் விடுகிறார்கள் இல்லை, இதனை பார்த்துக் கொண்டு தமிழ் மக்களின் தலைவரான சம்பந்தன் ஐயா கோமாநிலையில் இருப்பது போல மீளாத் துயிலில் ஆழ்ந்து கொண்டிருக்கிறார் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

06▶

## மகிந்தவை மீட்க தயாராகும் குறூப் 16



கொழும்பு,மே 23

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இனவாதிகளிடத்தில் கைதியாவதற்கு முன்னதாக அவரை அவர்களிடமிருந்து மீட்டெடுத்து ஸ்ரீ லங்கா

06▶

## நள்ளிரவு முதல் பஸ் கட்டணம் அதிகரிப்பு



கொழும்பு,மே 23

நூற்றுக்கு 12.5 வீதத்தால் பஸ் கட்டணத்தை அதிகரிப்பதற்கு நேற்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில். அனுமதி வழங்கப்பட்ட நிலையில் கட்டண அதிகரிப்பு நேற்று

06▶

## பிரபாகரன் யார்? மக்களுக்கு தெரியும்



கொழும்பு,மே 23

பிரபாகரன் யுத்த வீரரா அல்லது பயங்கரவாதியா என்பது மக்களுக்குத் தெரியும் என அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ராஜித சேனாரத்ன தமிழீழ விடுதலைப் புலிகள்

06▶

## பொது விவாதத்துக்கு மகிந்தவுக்கு அழைப்பு



கொழும்பு,மே 23

முன்னாள் நிதி அமைச்சர் என்ற வகையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை தன்னுடன் பொது விவாதத்துக்கு

06▶

## கரவெட்டியில் கத்திவெட்டு




கரவெட்டி,மே 23

கரவெட்டி மேற்கு ராஜலிங்கம் வீதி பகுதியில்.நேற்று பிற்பகல் 4மணியளவில் இடம்பெற்ற கத்தி வெட்டு சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

உறவினர்களுக்கிடையே இந்த கத்திவெட்டுச் சம்பவம் இடம்பெற்றதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் வெட்டுக்காயங்களுக்கு உள்ளானவர் முறையிட்டார்.

இதன்போது வெட்டியவர் வெட்டிய கத்தியுடன் பொலிஸில் சரணடைந்துள்ளார். வெட்டுக்காயங்களுக்குள்ளானவர்பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.



## திருநெல்வேலியில் மின்னல் தாக்கு

கொழும்பு,மே 23

யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலுள்ள வீடொன்று மின்னல் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளது. எனினும் வீட்டில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக

06▶

## கோத்தாவுக்கு செக்



கொழும்பு,மே 23

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கோரிக்கையை அமெரிக்க அரசாங்கம் நிராகரித்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல்

06▶

## தனிவழியில் ஐ.தே.க எம்.பி

கொழும்பு,மே 23

ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி, னர் சமிந்த விஜேசிறி, அரசாங்கத்தில் இருந்து விலகி, சுதந்திரமாகச் செயற்பட முடிவு

06▶

## புலிகளின் ஆயுதங்கள் கிடைக்கவே இல்லை



முல்லைத்தீவு,மே 23

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அம்பலவன் பொக்கணை பகுதியில் இறுதி யுத்தத்தின்போது விடுதலைப் புலிகள் கனரக ஆயுதங்களை புதைத்து வைத்துள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத்

06▶

## போரில் இறந்தவர்களை நினைவு கூர வேண்டும்



கொழும்பு,மே 23

போரில் இறந்தவர்கள் எந்தத் தரப்பினராக இருந்தாலும் அவர்கள் நினைவு கூரப்பட வேண்டும் என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் சிறைச்சாலைகள அமைச்சருமான சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

பொரளையில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர்,

“போரில் இரண்டு பக்கங்களிலும் மக்கள் இறந்தனர். போரில் இறந்தவர்கள் இலங்கையில் எந்த இடத்தில் வாழ்ந்தவர்களாக இருந்தாலும்,

06▶

## சீரற்ற காலநிலை:
# நுவரெலியாவில் 260 பேர் பாதிப்பு!





நுவரெலியா, மே 23

சீரற்ற காலநிலையால் நுவரெலியா பிரதேசத்துக்குட்பட்ட 12 கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள, 53 குடும்பங்களைச் சேர்ந்த 260 பேர் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர்.

மலையகத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட சீரற்ற காலநிலையால், மகாவலி ஆற்றின் கிளை ஆறான கொட்டகலை ஓயா பெருக்கெடுத்தது. இதனால், கொட்டகலை பிரதேச சபைக்குட்பட்ட லொக்கில் பிரதேசத்தில் உள்ள 12க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் வெள்ளத்தில் மூழ்கின.

இதில், பாதிக்கப்பட்டவர்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இதேவேளை, கெசல்கமுவ ஓயா பெருக்கெடுத்ததனால் நோர்வூட் பிரதேசத்திலுள்ள 46 வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.

இதனால், அதிகளவாகப் பாதிக்கப்பட்ட 5 குடும்பங்களை சேர்ந்த 32 பேர் நோர்வூட் முஸ்லிம் பள்ளிவாசலில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, உடை, தங்குமிட வசதிகள் யாவும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தொடர் மழையால் நுவரெலியா பிரதேசத்தில் பல விவசாயக் காணிகள் சேதமடைந்துள்ளதோடு, மக்களின் அன்றாட வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## ரங்கஜீவ, எமிலுக்கு மறியல் நீடிப்பு!

கொழும்பு, மே 23

போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ மற்றும் முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சன் ஆகியோருக்கு மீண்டும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதிவரை விளக்கமறியலில்வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரம் தொடர்பிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## இளைஞர்களுக்கு விசேட கடன் திட்டம்

கொழும்பு, மே 23

இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு விசேட கடன் திட்டம் ஒன்றை வழங்க இலங்கை வங்கி முன்வந்துள்ளது.

சிறிய அளவிலான வருமானத்தை ஈட்டித்தரும் தொழில் முயற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள, இளம் முயற்சியாளர்களுக்கே இந்தக் கடன் உதவி வழங்கப்பட உள்ளது.

இதற்கென இலங்கை வங்கியால் 'துருணு திரிய' எனும் கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி அன்று 35 வயது அல்லது அதற்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பிட்ட கடன் திட்டத்தைப் பெற்றுக் கொள்ள ஆர்வம் உள்ள இளம் தொழில் முயற்சியாளர்கள், கிராம உத்தியோகத்தர்களிடமோ அல்லது அருகில் உள்ள இலங்கை வங்கிக் கிளையிலோ மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

## க.பொ.த. பரீட்சார்த்திகளுக்கு அடையாள அட்டை விநியோகம்!

கொழும்பு, மே 23

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு, தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவித்தார்.

சில அதிபர்கள் அடையாள அட்டைகளைப் பெற்றுகொள்ள வேண்டிய மாணவர்களின் விண்ணப்பங்களை இதுவரையில் தமது திணைக்களத்துக்குஅனுப்பி வைக்கவில்லை என்றும் ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

"இந்த முறை பரீட்சைக்கு 350,000 மாணவர்கள் தோற்றவுள்ளனர். இருப்பினும் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுகொள்வதற்காக 60 சதவீதமான மாணவர்களின் விண்ணப்பங்களே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்பங்களை மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அனைத்து அதிபர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அனுப்பப்பட்ட விண்ணப்பங்களில் முறையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் பல உள்ளன. தேசிய அடையாள அட்டையைப் பெற்றுகொள்வதற்காக இறுதி நேரத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதன் மூலம் ஆட்பதிவு திணைக்களம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளும் நிலைமை ஏற்படும். இதனால், கூடிய விரைவில் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

## வாக்குறுதிகளை மறந்துவிட்ட அரசு!

### கைதிகளை பாதுகாக்கும் அமைப்பு சாடல்

யாழ்ப்பாணம், மே 23

தமிழ் அரசியல் கைதிகள் எவரும் சிறையில் இல்லை என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. இது தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வரும் முன் கூறிய வாக்குறுதிகளை மறந்துள்ளமையை எடுத்துக் காட்டுகின்றது என்று சிறைக் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

"தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது அரசியல் கைதிகள் விடயத்துக்கு விரைவில் தீர்வு பெற்றுக் கொடுப்பதாக பாதிக்கப்பட்ட மக்களிடம் வாக்குறுதிகளை வழங்கியது. ஆனால், இதுவரை காலமும் முன்வைக்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

அரசாங்கம் தெற்குக்கு ஒரு நீதியையும் வடக்குக்கு மற்றுமோர் நீதியையும் முன்னிலைப்படுத்தி நிர்வாகத்தை மேற்கொண்டு வருகின்றது. தமிழ் அரசியல் கைதிகள் என்று சிறையில் எவரும் இல்லை என அரசாங்கத் தரப்பினர் பகிரங்கமாக கூறியுள்ளனர். இது இறுதிக்கட்ட யுத்தத்தின் போது கைது செய்யப்பட்டு இதுவரை காலமும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது." என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஆ)

## சட்டத்தரணிகள் சங்கத்தால் இலவச சட்ட ஆலோசனை

கொழும்பு, மே 23

தேசிய நீதி வாரத்தை முன்னிட்டு பொது மக்களுக்கு இலவச சட்ட ஆலோசனைச் சேவைகளை வழங்க உள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தேசிய நீதி வாரம் எதிர்வரும் 27 ஆம் திகதிவரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதனை முன்னிட்டு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி யு.ஆர்.டி.சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

"தேசிய நீதி வாரத்தில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது. அதன்படி நீதி முறைமை மற்றும் சட்டதிட்டங்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன. அத்தோடு விசேடமாக கொழும்பை மையமாகக் கொண்டு நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட சில பிரதேசங்களில் இலவச சட்ட ஆலோசனைச் சேவைகளும் வழங்கப்பட உள்ளன.

தேசிய நீதி வாரத்தின் இறுதி இரண்டு நாட்களான எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை மாநகர சபை மைதானத்தில் காலை 9 மணி முதல் பொதுமக்களுக்கான இலவச சட்ட ஆலோசனைச் சேவை முன்னெடுக்கப்படும். அத்தோடு மாத்தளை, யாழ்ப்பாணம், காலி, மாத்தறை, அநுராதபுரம், மட்டக்களப்பு, குருநாகல், வவுனியா மற்றும் கம்பஹா ஆகிய பிரதேசங்களிலும் இலவச சட்ட ஆலோசனைச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விசேடமாக சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளின் பிணை மற்றும் விடுதலை தொடர்பிலான சட்ட ஆலோசனைகளை அவர்களது உறவினர்கள் பெற்றுக்கொள்ள முடியும். சிறைச்சாலைக் கைதிகள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட உள்ளது. சட்டம் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் பிரதானமாக பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அரச ஊழியர்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட உள்ளது. " என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

## நாட்டில் இனவாதம் ஒழிய வேண்டும்!

### ராஜித வலியுறுத்து



கொழும்பு, மே 23

இனவாதம், மதவாதம் என்பன நிலவினால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது என்று அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

மொரட்டுவையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே, அவர்இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இனவாதத்தை அடிப்படையாக வைத்து நாட்டை ஆள்வது பொருத்தமற்றது. தோழமை உணர்வுடன் நாட்டை ஆளவேண்டும். இனவாதத்தை அகற்றியதன் மூலமே மலேசியா முன்னேற்றமடைந்தது. திருடர்கள் இல்லாத அரசாங்கம் இல்லை. திருடர்களைக் கைதுசெய்து நீதியின் முன் நிறுத்தவேண்டும்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

## பிரதி சபாநாயகராக அங்கஜன் எம்.பி?



கொழும்பு, மே 23

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுக்கு, பிரதி சபாநாயகர் பதவியை வழங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிபாரிசு செய்துள்ளதாக அமைச்சர் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தகவலை, நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் சபாநாயகர் கரு ஜயசூரியா தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஆ)

## வைரஸ் தொற்றால் முன்பள்ளிகளுக்கு பூட்டு

கொழும்பு, மே 23

தென் மாகாணத்தில் பரவிவரும் வைரஸ் தொற்றுக் காரணமாக, அங்குள்ள சகல முன்பள்ளிகளையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை மூடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் தொற்றால் அதிகமாக சிறுவர்களே பாதிக்கப்படுகின்றனர். இதனால், வைத்தியசாலைகளின் சிறுவர் பிரிவுகளில் அதிக இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், விசேட வைத்திய நிபுணரின் அறிவுரைக்கு அமைய இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ஆ)

## கொள்ளையிட்ட மூவர் சிக்கினர்!

தங்காலை, மே 23

தங்காலை - பெலிஅத்த வலஸ்முல்ல வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில், ஆறு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்ட மூவரைத் தங்காலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பெலிஅத்த பிரதேசத்தைச் சேர்ந்த 18 மற்றும் 19 வயதுடையவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தங்காலை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஆ)

எதிரொலி Ethiroli
புதன். 23 மே 2018 ethirolimedia@gmail.com

# பிணம் தின்னும் அரசு

ஈழத்தில் இளைஞர்கள் ஆயுதமேந்துவதற்கு உடனடிக் காரணியாக இருந்தது, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளே. சிங்களப் பேரினவாதம், தன் ஏவல் நாய்களான பொலிஸைக் கட்டவிழ்த்து விட்டு, அப்பாவி மக்களை வேட்டையாடியதற்கு, பதிலடி கொடுக்க ஆயுத வழியே சரியென இளைஞர்கள் முடிவெடுத்தமையாலேயே 3 தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கை போர் தின்ற நாடாக மாறவேண்டியிருந்தது.

இப்போது அதே வரலாறு இந்தியாவின் தமிழகத்திலும் மீண்டுமொருமுறை எழுதப்பட்டுவிடுமோ என்று தோன்றுகின்றது. மக்கள் நலனுக்குக் கேடு விளைவிக்கும் ஸ்டெர்லைட் என்ற தொழிற்சாலையை மூடுமாறு, அந்தப்பகுதி மக்கள் நடத்திய அகிம்சைப் போராட்டத்தை மிகக் கொடூரமாக, உயிர்ப்பலியெடுப்பின் மூலம் நசுக்க நினைத்திருக்கிறது அதிகார வர்க்கம். இந்திய மத்திய அரசும், தமிழக அரசும் இணைந்து தங்கள் நாட்டு மக்களின் உயிர்களை விடவும், அவர்களுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய தொழிற்சாலையே பிரதானம் என்ற குரூர எண்ணம் கொண்டிருப்பதையே தூத்துக்குடிச் சூட்டுச் சம்பவம் உணர்த்துகின்றது.

சகட்டு மேனிக்குச் சுட்டுக் கொல்லுமளவுக்கு அப்படி என்ன குற்றத்தைச் செய்துவிட்டார்கள் அந்த மக்கள்? அவர்கள் செய்ததெல்லாம் தங்களுக்கும், தங்கள் சந்ததிக்கும் ஊறு விளைவிக்கும் ஒரு அபாயகரமான தொழிற்சாலையை அப்புறப்படுத்தக் கோரி வீதியில் இறங்கிப் போராடியதுதான். வாழ்வதற்காக அகிம்சை வழியில் போராடியது குற்றமெனில், இந்தியாவின் தேசபிதாவாக மகாத்மா காந்தி என்றிருப்பதை மாற்றி, அவரைச் சுட்டுக் கொன்ற நாதுராம் கோட்சே தான் இந்திய தேசபிதாவாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.

ஒரு மக்கள் அரசு என்ற வகையில் இந்திய மத்திய அரசும், தமிழக அரசும் குறித்த தொழிற்சாலையை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். சரி, அந்த முதலாளிகள் போடுகின்ற பணத்துக்கு வாலாட்டுவதே அரசுகளின் பணியெனில், அவர்கள் போடுகின்ற எலும்புத் துண்டைக் கவ்விக் கொண்டு, கண்டும் காணாமலுமாவது இருந்திருக்கலாம். ஆனால், முதலாளித்துவத்திடம் வாங்கி தின்றமைக்கு விசுவாசம் காட்டுவதாக எண்ணிக் கொண்டு, மக்களுக்காகப் போராடியவர்களை சுட்டுப் பொசுக்கி இருக்கிறது அதிகாரம்.

போராட்டம் நடந்த இடமே மயானபூமியாக காட்சியளிக்கிறது. கடைசியாக வந்த தகவலில் இருந்து இறந்தவர்களின் எண்ணிக்கை பதினெட்டுப் பேருக்கும் அதிகம் எனத் தெரிகிறது. தாக்கப்பட்டவர்களில் இன்னும் எத்தனைபேர் உயிருக்கு போராடிக்கொண்டிருக்கிறார்கள் என எதுவும் தெரியவில்லை.

தூத்துக்குடி மக்கள் அமைதி காக்க வேண்டும் என அறிக்கை கொடுத்த எடப்பாடி இன்னும் எதற்காக அமைதியாக இருக்கிறார். கடந்த நூறு நாட்கள் அறவழியில் நடந்த போராட்டத்திற்கு என்ன பதில் சொல்லப்போகிறார். பேய்கள் அரசாண்டால் கழுகுகள் பிணம் தின்னும்.

பேய்கள் அரசாளுகின்றன பிணம் தின்னும் கழுகுகள் தூத்துக்குடியை முற்றுகையிட்டு வானெங்கிலும் திரிந்து அலைகின்றன. எங்கெல்லாம் அடக்குமுறைகளும், அக்கிரமங்களும் நிகழ்கின்றனவோ அங்குதான் புரட்சி வெடிக்கும். புதிய புரட்சிக்கான அறிகுறிகள் தமிழகத்தின் துலங்கத் தொடங்குகின்றன.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# சரணடைந்து காணாமல்போனோரின் ஆள்கொணர்வு மனு விசாரணை ஒத்திவைப்பு

வவுனியா, மே 23

இறுதிப் போரின் நிறைவில் முல்லைத்தீவு மாவட்டம் வட்டுவாகல் பிரதேசத்தில் இராணுவத்தினரிடம் சரணடைந்ததன் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள 3 ஆள்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகள் வரும் ஜூலை 9ஆம் திகதிக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டன.

வவுனியா மேல் நீதிமன்றின் கட்டளைக்கு அமைவாக இந்த வழக்குகள் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆரம்ப விசாரணைகள் இடம்பெற்றன. அந்த விசாரணைகள் நிறைவடைந்து ஆரம்ப விசாரணை அறிக்கைகள் வவுனியா மேல் நீதிமன்றுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

இதனையடுத்து இந்த ஆள்கொணர்வு மனுக்கள் தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிப்பதற்காக வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லா முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டன.

"வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இந்த ஆள்கொணர்வு மனுக்கள் தொடர்பான ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் முல்லைத்தீவு மாவட்டம் வட்டுவாகல் பகுதியில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து, நடைபெற்ற சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா மேல் நீதிமன்றம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றுக்கு கட்டளையிட்டது.

அதற்கு அமைவாக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் நடத்திய விசாரணைகள் தொடர்பிலான அறிக்கைகள் வவுனியா மேல் நீதிமன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

எனினும் முல்லைத்தீவு நீதிமன்ற விசாரணை அறிக்கைகளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் மனுதாரர்களுக்கு இன்னும் கிடைக்காதபடியால், அவற்றைப் பெறுவதற்கான கால அவகாசம் வழங்கி இந்த வழக்கு விசாரணைகள் ஜூலை மாதம் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன" என்று மனுதாரர்கள் சார்பில் முன்னிலையாகியிருந்த மூத்த சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல் தெரிவித்தார்.

# இன்புளுவன்ஸா வைரஸ் கட்டுப்பாட்டுக்குள்



கொழும்பு, மே 23

தென் மாகாணத்தில் பல பகுதிகளில் பரவுகின்ற இன்புளுவன்ஸா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தற்போது எடுக்கப்பட்டிருப்பதாக சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

அதேநேரம் தற்போது இந்த நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

சுகாதாரக் குழுக்கள், மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தென் மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இனம் காணப்படாத வைரஸ் தொற்று காரணமாக தென் மாகாணத்தில் அண்மைய நாட்களில் 07 சிறுவர்கள் உயிரிழந்திருந்த நிலையில், அது இன்புளுவன்ஸா வைரஸ் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இரண்டு கைகளையும் சவர்க்காரமிட்டு கழுவி சுத்தமாக வைத்திருக்குமாறும், சன நெரிசல் மிக்க இடங்களுக்கு செல்வதை தவிர்க்குமாறும், சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நோய்க்கான அறிகுறிகள் இருந்தால் உடனடியாக அருகில் உள்ள வைத்தியரை நாடுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

2 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணி மற்றும் தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்கள், சுவாச பிரச்சினையை எதிர்கொள்ளும் நபர்கள் மற்றும் வயது வந்தவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# மழை தொடரும்

கொழும்பு, மே 23

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ, மேல், மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் சில இடங்களில் 150 மி.மீற்றருக்கும் அதிகமான, ஓரளவு பலத்த மழை பெய்யக் கூடும் என திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழையின்போது அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும் எனவும் இடி மின்னல் தாக்கங்களினால் ஏற்படக் கூடியபாதிப்புகளைதவிர்த்துக்கொள்ள பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அதேவேளை தென்மேற்கு பகுதியில் காணப்படும் மழையுடனான காலநிலை அடுத்த சில நாட்களுக்கு தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேவையான நிதியை உடன் வழங்க பணிப்பு



கொழும்பு, மே 23

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக தேவையான அளவு நிதியை உடனடியாக வழங்குமாறு நிதியமைச்சர் மங்கள சமரவீரவினால் திறைசேரிக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஊடக மற்றும் நிதியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு வசதியாக தேவைப்படுகின்ற நிதியை வழங்குவதற்கு திறைசேரி அதிகாரிகளுக்கு அமைச்சரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மாவட்ட மட்டத்தில் நிவாரணம் வழங்குவதற்கு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் மாவட்ட செயலாளர்களால் கேட்கப்படுகின்ற அளவு பணத்தை உரிய பகுதிகளுக்கு விரைவாக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக ஊடக மற்று நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க கூறியுள்ளார்.

# நீர்வேலி வாள்வெட்டு சந்தேக நபர்கள் அடையாளம் காணப்படவில்லை

யாழ்ப்பாணம், மே.23

நீர்வேலியில் கோவிலில் வைத்து இருவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்திய வழக்கின் சந்தேக நபர்கள் மூவரையும் சாட்சிகள் இருவரும் அடையாளம் காணவில்லை.

சந்தேகநபர்கள் மூவரும் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் நேற்றையதினம் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர்.

தாக்குதலுக்குள்ளான இருவரும் சாட்சிகளாக முற்படுத்தப்பட்டனர். சாட்சிகளால் சந்தேகநபர்களை அடையாளம் காட்ட முடியவில்லை.

சம்பவத்தின் போது தாக்குதலை மேற்கொண்டவர்கள் முகத்தை மூடி துணி கட்டியிருந்ததால் சரியாக அடையாளம் காணமுடியவில்லை என்று சாட்சிகள் மன்றில் தெரிவித்தனர்.

இந்த நிலையில் சந்தேக நபர்கள் மூவரையும் வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

நீர்வேலி செம்பாட்டுப் பிள்ளையார் கோவிலில் கடந்த 7ஆம் திகதி இளைஞர்கள் இருவர் மீது வாள்வெட்டு நடத்தப்பட்டது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அப்புத்துரை கிரிசன் (வயது -23) என்ற இளைஞன் கழுத்தில் வெட்டுப்பட்டும் கிரிகேசன் (வயது -23) காலில் படுகாயமடைந்தனர்.

## இன்று நாளும் கோளும்

23.05.2018 புதன்கிழமை விளம்பி வருடம் வைகாசி மாதம் 09 ஆம் நாள்

நவமி பி.ப. 10.26 வரை | பூரம் பி.ப. 10.57 வரை | குளிகை மு.ப. 10.30-12.00

இராகுகாலம் 12.00- 01.30 | சுபநேரம் காலை 09.30 - 10.30 | எமகண்டம் 07.30 - 09.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உற்சாகம் | சினம் | முயற்சி | தெளிவு | சிக்கல் | பக்தி | நிம்மதி | சாந்தம் | இன்பம் | நலம் | நற்செயல் | ஆக்கம் |

# அரசியல் உணர்வற்ற இனம் அழிந்துவிடும்!

## துரைராஜசிங்கம் ஆரூடம்



வாகரை, மே 23

அரசியல் உணர்வு இல்லாத ஓர் இனம் அழிந்துவிடும். அரசியல் உணர்வு இருந்தால்தான் எம்முடைய மொழி, இனம், இருப்பிடம், நிலம் என அனைத்தும் பாதுகாக்கப்படும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சருமான கிருஸ்ணபிள்ளை துரைராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

வாகரை கட்டுமுறிவு மீனவர் கூட்டுறவுச் சங்கத்துக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“இந்த நாட்டில் நாங்கள் தமிழர்கள் என்ற உணர்வோடு வாழ வேண்டும். ஏனெனில், தமிழர்கள் வாழ்ந்த பல இடங்கள் இப்போது அடையாளம் இழந்து விட்டன. சிலாபம், காலி, கதிர்காமம் போன்ற பல பிரதேசங்கள் அவ்வாறு மாற்றமடைந்துள்ளன. ஏனெனில், அங்கெல்லாம் எமக்கான சிறந்த தலைமைத்துவம் இருக்கவில்லை. ஆனால், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவ்வாறான நிலைமை இல்லை. அதற்கு சிறந்த தலைமைத்துவம் இருப்பதே காரணம் ஆகும். இராவணன், குளக்கோட்டன் போன்ற தமிழ் மன்னர்கள் ஆண்ட திருகோணமலை, மெது மெதுவாக அழிந்து கொண்டிருக்கிறது. காரணம் அங்கு தமிழர்கள் உணர்வோடு வாழவில்லை.

தமிழ் மக்களை வழிநடத்துகின்ற சிறந்த தலைமைத்துவத்தின் பின்னே அனைவரும் அணிவகுத்து நிற்க வேண்டும். தனித்தனியே நாங்கள் அதனைச் சாதிக்க முடியாது. தமிழர்களுக்கான அரசியல் கட்சி எதுவென்று மக்களுக்குத் தெரியும். எந்தவிதத்திலும் கலப்பு இல்லாமல் மக்களுடைய உரிமைகளுக்காகத் தொடர்ந்தும் குரல் கொடுக்கின்ற, அந்தத் தலைமைக்குக் கீழே மக்கள் ஒன்றுபட வேண்டும். ” என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

## எவரெஸ்டைத் தொட்ட 2 ஆவது இலங்கையர்!



கொழும்பு, மே 23

எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய இரண்டாவது இலங்கையராக யோஹான் பீரிஸ் சாதனை படைத்துள்ளார்.

அத்துடன் இலங்கை சார்பில் இந்த இலக்கை எய்திய முதலாவது ஆண் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவர் நேபாள நேரப்படி நேற்றுக் காலை 5.55 மணியளவில் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்துள்ளார்.

இதற்கு முன்னர் கடந்த 2016 ஆம் ஆண்டில் ஜயந்தி குரு உத்தும்பால எவரெஸ்டில் ஏறியமையே இலங்கையர் ஒருவர் படைத்த சாதனையாக இருந்தது.

எவ்வாறாயினும், கடந்த வருடத்தில் உத்தும்பாலவுடன், யோஹான் பீரிஸ் எவரெஸ்ட் சிகரத்தில் ஏற முயற்சி செய்திருந்த போதும் அவர் எடுத்துச்சென்ற ஒட்சிசன் தாங்கியில் கசிவு ஏற்பட்டமையால், அப்போது அவரால் அந்தப் பயணத்தில் இணைந்து கொள்ள வாய்ப்புக் கிட்டவில்லை. (ஆ)

## இலஞ்ச விவகாரம்: மறியல் நீடிப்பு!



கொழும்பு, மே 23

இலஞ்சம் பெற்ற விவகாரம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட ஜனாதிபதி செயலகத்தின் பிரதானி மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆகிய இருவருக்கும் எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களான இருவரையும் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இந்திய நிறுவனம் ஒன்றிடமிருந்து 2 கோடி ரூபா இலஞ்சம் பெற்ற குற்றத்துக்காக ஜனாதிபதி செயலகத்தின் பிரதானி ஐ.கே. மஹானாம மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பி. திசாநாயக்க ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## ஆடைக்குள் தங்கம்: நால்வர் சிக்கினர்!

கொழும்பு, மே 23

சட்ட விரோதமான முறையில் உள்ளாடைக்குள் மறைத்து வைத்து, ஒரு தொகைத் தங்கத்தை இலங்கைக்கு கடத்திவர முயன்ற நான்கு பேர், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து, சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை டுபாயில் இருந்து கட்டுநாயக்காவுக்கு யூ.எல். 226 என்ற விமானத்தில் வந்த நால்வரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய குறித்த நால்வரையும், சுங்க அதிகாரிகள் சோதனையிட்டபோது அவர்களிடம் இருந்து சுமார் 27 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை மீட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் 44, 45,38 மற்றும் 39 வயதுடையவர்கள் எனவும், இவர்களில் மூவர் கொழும்பைச் சேர்ந்தவர்கள், ஒருவர் கேகாலையைச் சேர்ந்தவர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)

# அத்தியாவசியப் பொருளாக உரத்தை உள்ளீர்க்க முடிவு

கொழும்பு, மே 23



விவசாயிகளுக்கு நன்மை அளிக்கும் விதமாக இனிமேல் உரத்தையும் அத்தியாவசியப் பொருளாக உள்ளீர்த்துக் கொள்வதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

உரத்தை அத்தியாவசியப் பொருளாகப் பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் இந்த வாரத்தில் வெளியிடப்படும் என்றும் அது தொடர்பானமுன்னெடுப்புக்களில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை ஈடுபட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சந்தைகளில் கூடுதலான விலைக்கு உரம் விற்பனை செய்யப்படுவதையும், அதனால், விவசாயிகள் பாதிக்கப்படுவதையும் தடுக்கும் முகமாகவே விவசாய அமைச்சு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

சில வர்த்தகர்கள் உரத்தைப் பல்வேறு விலைகளுக்கு விற்பனை செய்வதாகவும் ,மேலும் சிலர் பல உர வகைகளைக் கலந்து கலவை செய்யப்பட்ட உரத்தைக் கூடுதலான விலைக்கு விற்பனை செய்வதாகவும் முறைப்படுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறான வர்த்தகர்களை முற்றுகையிடுவதற்கு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை மேற்கொள்ள உள்ளது.

கூடுதலான விலைக்கு உரத்தை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கான விற்பனை அனுமதிப் பத்திரம் இரத்து செய்யப்படும் என்று உர நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தர்.

அரசாங்கம் ஒரு ஏக்கர் நெல் விவசாயத்துக்கு 5 ஆயிரம் ரூபாவை உரமானியமாக வழங்குகின்றது. ஆகக் கூடுதலாக ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கருக்கே உரமானியம் கிடைக்கும். தற்போது 50 கிலோகிராம் கொண்ட உரப்பையை 500 ரூபாவுக்கு அரசு உர மானியமாக வழங்குகின்றது.

இதேவேளை, 5 ஏக்கருக்கு மேல் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தமக்குத் தேவையான 50 கிலோகிராம் கொண்ட உரப்பையை சந்தையில் ஆயிரத்து 500 ரூபாவுக்குப் பெற்றுக் கொள்வதற்கும் அரசு சலுகை அளித்துள்ளது. (ஆ)

# முல்லையில் விபத்து இளைஞன் படுகாயம்!



முல்லைத்தீவு, மே 23

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில், இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞன்மீது, விசேட அதிரடிப் படையினரின் வாகனம் மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

படுகாயமடைந்த இளைஞன் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)




# ஊவா மாகாணத்தில் உடன்படிக்கை கைச்சாத்து

பதுளை, மே 23

ஊவா மாகாணக் கிராம சக்தி மலர் சங்கத்துக்கும் - ஹேலிஸ் தனியார் நிறுவனத்துக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

கிராம சக்தி மக்கள் இயக்கத்தின் ஊவா மாகாண முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் நேற்று முன்தினம் முற்பகல் பதுளை நூலகக் கேட்போர் கூடத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே, ஜனாதிபதி முன்னிலையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

மலர் செய்கையாளர்களுக்குப் பிரச்சினையாகக் காணப்பட்ட நிலையான விலை மற்றும் புதிய சந்தை வாய்ப்புக்களை பெற்றுத் தர இந்த உடன்படிக்கையின் மூலமாக ஹேலீஸ் நிறுவனம் முன்வந்துள்ளது. (ஆ)

# ஒருவரே தலைவர்!

## சொல்கிறார் பீரிஸ்



கொழும்பு, மே 23

ஒரு கட்சிக்கு ஒரு தலைவர் தான் இருக்க முடியும். இரண்டு பேர் இருக்க முடியாது. மைத்திரிபால சிறிசேனவின் தலைமையைக் கைவிட்டு வந்தால்தான், அரசாங்கத்தை விட்டு வெளியேறிய சுதந் திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப் பினர்களையும் இணைத்துக் கொள்ள முடியும் என்று பொதுஜன முன்னணி யின் தலைவரான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

"கைவிட்டு வருபவர்களைப் பொது ஜன முன்னணி வரவேற்கும். ஆனால், அவர்கள் மகிந்த ராஜபக்சவின் தலை மைத்துவத்தை ஏற்றுக் கொள்ள வேண் டும். மகிந்த ராஜபக்சவின் தலைமை யையும் பொதுஜன முன்னணியின் கொள்கைகளையும் ஏற்றுக் கொண் டால், சுதந்திரக் கட்சியினர் மாத்திர மல்ல, வேறு எந்தக் கட்சியினராக இருந்தாலும் எமது கதவுகள் திறந்தே இருக்கும். எதிர்காலத்தில் நடக்கும் அனைத்துத் தேர்தல்களிலும் பொது ஜன முன்னணி, தாமரை மொட்டுச் சின்னத்திலேயே போட்டியிடும்" என் றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)



## இயற்கை வடிவத்திலைதான் கடவுள் வருவார்

நான் நினைக்கிறன் போன வருசமும் வைகாசி யிலை இப்பிடித்தான் காண்டாவனத்துக்கை பெய்த மழையாலை சனங்கள் அல்லோல கல்லோலப்பட்டவை. இப்ப பாத்தால் எல்லா ஓயாக்களாலையும் வெள்ளம் பெருகத்துவங்கிவிட்டுது எண்டு றேடியோவிலை சொன் னவை. இஞ்சையும் நேற்றைக்கு இடியும், மின்னலும் ஆக்களை வெருட்டிக் கொண்டபடி. பலாலி றோட் டிலை தபால் கட்டையடிச் சந்திக்குக் கிட்டவா ஒரு தென்னையிலை மின்னல்பட்டு எரியத் துவங்கிவிட்டிது. ஆனால் மழை கொஞ்ச நேரம் சிணிங்கிப்போட்டு விட்டிட்டுது.

தெற்கிலை கொஞ்சச் சனம் மழை வெள்ளத்தாலை செத்துப்போச்சுதாம். அதுக்கை வளிமண்டலத் திணைக் களம் இன்னும் மழை பெய்யும் எண்டு வெருட்டினபடி. மழை பெய்யும், காத்தும் பெலமா அடிக்கும். மலை நாட்டிலை மண் சரியும் எண்டு அடிக்கடி றேடியோ விலை சொன்னால் அதைக் கேக்கிற சனத்துக்கு என்ன மாதிரி இருக்கும் எண்டு நினைக்கிறியள்.

இப்ப இரத்தினபுரி, நுவரெலியா, பதுளை, கண்டி, மாத்தளை, கொழும்பு, களுத்துறை, கேகாலை, குரு நாகல், கம்பஹா, காலி எண்டு எல்லா இடத்திலையும் மழை குழப்படி விடும் எண்டு அறிவிச்சிருக்கினம். இந்த இடங்களிலை காலநிலை சீரில்லாமல் கிடக்கும். ஆறுகள் பெருகும். எல்லா பிரச்சினையளும் நடக்க வாய்ப்பிருக்கெண்ணினம்.

சும்மா ஒரு கதைக்குச் சொல்லுவம். உந்த வெள்ள அபாயம் வரும் எண்ட இடத்திலை இருக்கிற சனத் தைப் பற்றிக் கொஞ்சம் யோசிப்பம். அவையும் சாமான் சக்கட்டை எடுத்துக் கொண்டு வேறை இடத்துக்குப் போறதெண்டால் விளையாட்டே? இப்ப அவைக்கு விளங்கும். நாங்களும் அந்தக் காலத்திலை கந்த சட்டி விரதக் கடைசியிலண்டு பாறணையும் இல்லாமல் வீட்டிலை கிடந்த கைக்குய எம்பிட்ட சாமான் சக்கட்டை எடுத்துக் கொண்டு கிளம்பி நாவற்குழி காண அடை மழை எண்டும் பாராமல் குடைக் கம்பியிலை வழிஞ்ச சொட்டுத் தண்ணியைக் குடிச்சு குடிச்சுக் கொண்டு இடம் பெயந்தனாங்கள். இடம் பெயந்து போற தெண்டது சும்மா விளையாட்டே? எங்கடை ஆத்மா வைக் கழட்டி எறிஞ்சு போறதுக்குச் சமன். இப்ப நினைச்சால் கூட கண்கலங்கி நெஞ்சுக்கை ஏதோ செய்யிது. நெஞ்சடைச்சு சீவன் போகாத குறையாத் தான் ஒவ்வொண்டையும் யோசிக்க வேண்டிக் கிடக்கு.

வெள்ளத்துக்கை நிண்டு தவிக்கிற சனம் ஆராக் கிடந்தால் என்ன? சிங்களவனாக் கிடந்தால் என்ன? தமிழன் எண்டால் என்ன? சோனகர் எண்டால் என்ன? எல்லாரும் சனங்கள்தான். முதலிலை உதவி செய்ய வேணும். அதுதான் எங்கடை கடமை. இயற்கை இண்டைக்கு அவையைத் தண்டிச்சால் நாளைக்கு எங்களைத் தண்டிக்க எவ்வளவு நேரம் ஆகும். அது தான் நாங்கள் கடவுளுக்குப் பயப்பிடுகிறது. சுனாமி வந்த அண்டு நாங்கள் பட்டபாடு? அப்ப நாங்கள் முல்லைத்தீவிலை நிண்டனாங்கள். கண்மூடித் துறக்கிறதுக் கிடையிலை கடல் தண்ணி வந்து நிண்டது கண்டது எண்டு எல்லாத்தையும் வாரிக் கொண்டு போகேல் லையே? அப்ப வாழ்க்கையிலை வலு நிதானமா நடக்க வேணும் எண்டு அப்ப அடிக்கடி சொல்லுறது உதுக்குத்தான், கடவுள் வந்து ஒருநாளும் தண்டிக்க மாட்டார். கடவுள் வெள்ளம், சுனாமி எல்லா வடி விலையுந்தான் வருவர் எண்டதுதான் அப்பூன்ரை விளக்கம். என்ரை அப்பு சொல்லுறவர் எண்டதுக்காக எல்லாத்தையும் சரி எண்டு சொல்ல வரேல்லை. ஆனால் அவர் சொன்னதெல்லாம் சரியா நடந்திருக்கு!

- வில்லங்கம் விநாசி



## வாழ்வாதார உதவி

பருத்தித்துறை, மே 23

கரவெட்டி மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் குறைந்த வருமா னங்களை பெறும் 30 குடும்பங்களுக்கு, வடமாகாணசபையால் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு கரவெட்டி கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகிய வற்றில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றன.

இதன்போது ஒவ்வொரு குடும்பங் களுக்கும் தலா ஒரு ஆடு வீதம் 30 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. (ஆ-11)

# 90,000 ஹெக்டெயரில் சிறுபோகச் செய்கை

கொழும்பு, மே 23

எதிர்வரும் சிறுபோகத்தில் மகாவலி வலயத்தில் சுமார் 90 ஆயிரம் ஹெக்டெ யர் நிலப்பரப்பில் நெற்பயிர்ச் செய்கையை மேற்கொண்டு நூறு சதவீத அறுவடையை பெற்றுக்கொள்வதற்கான புதிய திட்டங் கள் துரிதமாக நடைமுறைப்படுத்தப் பட உள்ளதாக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தற்போது கிடைத்துவரும் அதிக மழைவீச்சி காரணமாக மகாவலி வல யத்தில் உள்ள நீர்த்தேக்கங்கள், நீரால் நிரம்பியுள்ளன. இதனால், மகாவலி வலயங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு நீர்த் தட்டுப்பாடின்றி பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் வாய்ப்புக் கிடைத்துள் ளது என அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

நெல் அதிகமாக பயிரிடப்படும் மகா வலி வலயத்தில் நெற்பயிர்ச்செய்கையை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கான புதிய செயற்றிட்டங்களின் ஊடாக எதிர் வரும் சிறுபோகத்தில் விவசாய நடவடிக் கைகளை ஆரம்பிக்குமாறு மகாவலி அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி உரிய துறையினருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த சில வருடங்களாக காணப் பட்ட அதிக வறட்சியான காலநிலை காரணமாக, மகாவலி வலயத்தில் விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்ததுடன், விவசாயி களின் வாழ்க்கையில் சீரற்ற நிலை இருந் தது.

எனினும், வறட்சியான காலநிலை மாறி போதியளவு மழைவீழ்ச்சி கிடைத் துள்ளமையினால் விவசாய நடவடிக் கையை மீண்டும் ஆரம்பிக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்துள்ளது. அத்துடன் முறையான செயற்றிட்டங்களின் மூல மாக எதிர்வரும் சிறுபோகத்தில் விவ சாய நடவடிக்கைகளை புத்துணர்வு டன் ஆரம்பிப்பதற்கான சகல சலுகைக ளையும் விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுக் குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங் கியுள்ளார். (ஆ)

## அஸ்ரப் ஆஸ்பத்திரியில் தீ!



கல்முனை, மே 23

கல்முனை அஸ்ரப் வைத்தியசாலை யின் ஆய்வு கூடத்தில் நேற்று திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் சுகாதார தொழி லாளர்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட் டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த விபத்தால் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின் றன.

இந்த விபத்து தொடர்பான மேல திக விசாரணைகளைப் பொலிஸார் மேற் கொண்டுள்ளனர். (ஆ)

## திலுமின் கைபேசியை கையளிக்க உத்தரவு!

கொழும்பு, மே 23

பயங்கரவாதக் குற்றவிசார ணைப் பிரிவின் பொறுப்பின் கீழ் எடுக்கப்பட்ட, நாடாளுமன்ற உறுப் பினர் திலும் அமுனுகமவின் கைபே சியை மீண்டும் அவரிடமே வழங் குமாறு தெல்தெனிய நீதிவான் எம்.எச்.பரீக்டீன் நேற்று உத்தரவிட் டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மனு மூலம் விடுத்த கோரிக்கையை ஆராய்ந்த நீதிவான் இந்த உத்த ரவைப் பிறப்பித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் கண்டி நிர் வாக மாவட்டத்தில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் வாக்கு மூலம் வழங்குவதற்காக, கடந்த 15ஆம் திகதி பயங்கரவாத விசார ணைப் பிரிவில் ஆஜரான திலு மின் கைபேசியை, பயங்கரவாதக் குற்றவிசாரணைப் பிரிவினரின் தமது பொறுப்பில் எடுத்துக்கொண் டமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# தொடர்ச்சிகள்

## கோமாவில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட மாகாணசபை உறுப்பினர் எம். தியாகராஜாவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபை மீது குற்றத்தை சுமத்தி விட்டு எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் தப்பித்து கொள்கிறார்.

மாகாணசபைக்கு ஒதுக்கப்படும் நிதி மிக சொற்பமானது. அதனை வைத்தே இந்த வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களுக்குமான அபிவிருத்திப் பணிகளை செய்ய வேண்டியுள்ளது.

மத்திய அரசு வழங்கும் நிதியை கூட 50 வீதமாக குறைத்தே வழங்குகிறது.

அந்த நிதியை பெற்றுக்கொடுக்க வேண்டிய தமிழ் தலைமைகள் அதைப்பற்றி சிந்திக்காமல் மாகாணசபைக்கு இருக்கும் ஏனைய அதிகாரங்களையும் பெற்றுக்கொள்ள முயற்சி எடுக்காமல் வடமாகாணசபை முதலமைச்சர் மற்றும் உறுப்பினர்கள் சரியாக செயற்படவில்லை என்றும் அதனாலேயே கடந்த உள்ளூராட்சி தேர்தலில் நாம் பின்னடைவை சந்திக்க வேண்டி வந்ததாகவும் தமிழ் கட்சிகளின் தலைவர்களும் மற்றும் எதிர்க்கட்சி தலைவராக இருப்பவரும் சொல்லிவருகிறார்கள்.

உண்மையில் நாடாளுமன்றத்தில் இருக்கக் கூடிய எதிர்க்கட்சி தலைவர் வரவு செலவுத் திட்டங்கள் முன் வைக்கப்படும் போது வடக்கு கிழக்குக்கு விசேட நிதியை வழங்கவேண்டும் என்று கோரி அதனைப் பெற்று மாகாண சபைக்கு கொடுப்பதுக்கு பதிலாக மாகாணசபை மீது குற்றத்தை சுமத்தி விட்டு இவர்கள் தப்பி கொள்கிறார்கள்.

அத்துடன் ஒரு இலட்சம் பேரை கொன்றொழித்த முள்ளிவாய்க்காலில் முதலமைச்சர் அஞ்சலி செலுத்தியதற்காகவும் வடக்குமாகாண கல்வி அமைச்சர் பாடசாலைகளில் கொடிகளை அரைக்கம்பத்தில் ஏற்றுமாறு விடுத்த வேண்டுகோளுக்காகவும் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக மத்திய அரசில் உள்ள சிங்கள அரசியல் வாதிகள் கூறுகிறார்கள். ஒரு நாடு ஒரு தேசம் என்று கூறும் அரசாங்கத்துக்கு அந்த ஒரு நாட்டுக்குள் தான் அந்த ஒரு இலட்சம் மக்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள் என்பது புரியவில்லை. இது ஒரு ஜனநாயக நாடாக இருந்தால் அந்த மக்களுக்காக அன்றைய நாள் தேசிய கோடியை அரைக்கம்பத்தில் ஏற்றி இருக்கவேண்டும்.

அதனை ஒரு தேசிய துக்கத்தினமாக அறிவித்திருக்க வேண்டும். ஆனால் அதனை செய்யாத அரசு நினைவேந்தலை செய்த மாகாணசபை மீது நடவடிக்கை எடுக்கப் போவதாக கூறுகிறார்கள் என்றார்.

## திருநெல்வேலியில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர் தப்பினர்.

வீட்டின் பிரதான மின் இணைப்பு ஆளி வெடித்துச் சிதறியுள்ளது. இதனால் வீட்டின் பல பகுதிகளில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன் நீர் இறைக்கும் மோட்டார் இயந்திரமும் பழுதடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

அங்கு தென்னை மரம் ஒன்று மின்னல் தாக்கத்துக்குள்ளாகி தீப்பற்றி எரிந்தது.

சம்பவ இடத்துக்கு விரைந்த யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் படையினர், சுமார் அரை மணித்தியாலம் போராடி வீறிட்டு எரிந்த தீயை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

"கணவர் வேலைக்குச் சென்றுள்ள நிலையில் நானும் எனது பிள்ளையும், அம்மாவும் வீட்டுக்குள் இருந்தோம். திடீரென பெரும் சத்தத்துடன் வீட்டுக்குள்ளிருந்த பிரதான மின் இணைப்பு ஆளி வெடித்துச் சிதறியது. இதனால் நாம் பயத்துடன் வீட்டுக்குள்ளேயே நின்றோம். பின்னர் வீட்டுக்கு வெளியே வந்து பார்த்த போது தென்னைமரம் கொழுந்துவிட்டு எரிவதை அவதானித்தோம்"என்று வீட்டின் உரிமையாளரான குடும்பப் பெண் தெரிவித்தார்.

## நள்ளிரவு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளது

நேற்று காலை அமைச்சரவை கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் பேசும் போது போக்குவரத்து பிரதியமைச்சர் அசோக அபேசிங்க இதனை கூறினார்.

அதேநேரம் குறைந்தபட்ச கட்டணத்தை 10 ரூபாவில் இருந்து 12 ரூபாவாக அதிகரிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அவர் கூறினார்.

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதையடுத்து நூற்றுக்கு 6.56 வீதத்தால் பஸ் கட்டணத்தை அதிகரிக்க கடந்த அமைச்சரவை கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

எனினும் அந்தக் கட்டண அதிகரிப்பை ஏற்றுக் கொள்ளாத தனியார் பஸ் உரிமையாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்ததுடன், 12.5 வீதத்தால் பஸ் கட்டணத்தை அதிகரிப்பதற்கும் குறைந்தபட்ச கட்டணத்தை 12 ரூபாவாக அதிகரிப்பதற்கும் கோரியிருந்தனர்.

அதன்படி குறித்த கட்டண திருத்த யோசனை இன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

## பிரபாகரன்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் தெரிவித்த கருத்து குறித்து கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அமைச்சர் சரத் பொன்சேகாவிடம் ஊடகவியலாளர்கள் வினவிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், நாட்டின் சட்டங்களுக்கு அமையவே பயங்கரவாதி யார், படைவீரன் யார் என்பது நிர்ணயம் செய்யப்படும்.

பிரபாகரன் யுத்த வீரரா அல்லது பயங்கரவாதியா என்பது மக்களுக்குத் தெரியும். இது தொடர்பில் யாரும் குழப்பங்களை ஏற்படுத்திக் கொள்ள எவ்வித அவசியமும் கிடையாது.

எனவே, கருத்துக்களை வெளியிடும் போது நாக்கை கட்டுப்படுத்திக் கொண்டு கருத்து வெளியிட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

## போரில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதைப்பற்றி கருத்தில் கொள்ளாமல், அனைவரும் நினைவு கூரப்பட வேண்டும்.

வடக்கிலோ தெற்கிலோ, போரில் இறந்தவர்களை நினைவு கூருவதில் தவறு இல்லை.

எனினும், நாட்டைப் பிளவுபடுத்த முயன்ற தீவிர வாதிகளை நினைவு கூரப்படுவதை எதிர்க்கிறேன்." என்று அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அமைச்சர் ராஜித சேனாரத்னவும் போரில் மக்கள் கொல்லப்பட்டனரெனவும் எனவே அவர்களை நினைவு கூருவதில் தவறில்லையெனவும் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## தொடர்ந்து... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களை புண்படுத்தும் என்பதனால் விமர்சிக்கவில்லை.

இவ்வாறு வடமாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நேற்று தெரிவித்தார்.

வடமாகாண சபை உறுப்பினரை அமைச்சர் மனோ கணேசன் கோமாளி என விளித்து தெரிவித்த கருத்து தொடர்பில் தெரிவித்த போதே சிவாஜிலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

என்னுடைய கருத்துக்கள் தொடர்பில் எதிர்க்கருத்து தெரிவிக்க வேண்டும் எனில், அதனை அரசியல் நாகரிகத்துடன் தெரிவிக்க வேண்டும். எனது கருத்துக்களில் விமர்சனங்கள் இருந்தால் அவை தொடர்பில் பகிரங்க விவாதத்துக்கு வரலாம். அமைச்சர் மனோ கணேசனுடன் பகிரங்க விவாதத்துக்கு நான் தயாராகவே உள்ளேன்.

அமைச்சரைப் போல அரசியல் நாகரிகம் இல்லாமல் தனிப்பட்ட முறையில் கூட என்னால் விமர்ச்சிக்க முடியும். மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்களில் ஒருவராக இருப்பதனால் அவரை விமர்சிப்பது மலையக மக்களை புண்படுத்தும் என்பதனால் விமர்சிக்கவில்லை.

அவர் தான் ஏறி வந்த ஏணியை தற்போது எட்டி உதைத்துள்ளார். அவர்எறிவருவதற்கு, ஏணிப்படிகளாக இருந்த பிரபா கணேசன், குமரகுருபரன், வேலணை வேணியன் ஆகியோர் தற்போது எங்கே ? அவர்களை எட்டி உதைத்து விட்டார்.

நடந்தது இனவழிப்புதான் என சொல்வதற்கு அரசுக்கு அடிமையாக இருக்கும் அடிமை புத்தி சொல்ல விடாது தடுக்கலாம். ஆனால், நாம் இனவழிப்பு நடந்தது என்பதனை ஆணித்தரமாக சொல்வோம்.

மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது கூட இனவழிப்பின் ஓர் அங்கம்தான் என்பதனை அமைச்சர் அறிந்து கொள்ள வேண்டும்

## தூத்துக்குடியில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோருக்கு வயிற்றுப் பகுதிக்கு மேல் துப்பாக்கிக் குண்டுகள் துளைத்துள்ளன.

ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான பொதுமக்களின் போராட்டம் நேற்று 100ஆவது நாளை எட்டியது. இதை முன்னிட்டு நேற்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த போராட்டக் குழுவினர் முடிவு செய்திருந்தனர்.

இந்த நிலையில், பொலிஸாரின் தடுப்புகளையும் தாண்டி ஆயிரக்கணக்கான கிராம மக்கள் திரண்டு வந்து தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

போராட்டக்காரர்களுக்கும், அவர்களைத் தடுத்து நிறுத்த முயன்ற பொலிஸாருக்கும், இடையே மோதல் வெடித்ததை அடுத்து, போராட்டம் வன்முறையில் முடிந்தது.

போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பள்ளி மாணவி உட்பட 18 பேர் உயிரிழந்தனர். 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

## மகிந்தவை மீட்க... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக் கட்சியுடன் இணைப்பதே தேசிய அரசாங்கத்திலிருந்து விலகிய ரணில் எதிர்ப்பு குழுவின் நோக்கம் என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா இதனை தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் இணைப்பதே ரணில் எதிர்ப்பு குழுவின் அடுத்த கட்ட விரைவு நடவடிக்கையாகும்.

இதன் முதற்கட்டமாக பௌத்த பீடங்களின் தேரர்களை சந்தித்து பேச்சுக்களை முன்னெடுத்துள்ளோம்.

விரைவில் மகிந்த ராஜபக்ஷவை சந்திந்து கலந்துரையாடவுள்ளோம், அதே போன்று தமிழ் தேசிய கூட்டமைப்பினரையும் சந்திக்கவுள்ளோம்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் எம் மீது சுமத்திய குற்றச்சாட்டுக்களுக்கு அன்றைய தினம் சிறந்த பதிலினை வழங்கவுள்ளோம்.

அதன் பின்னர் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைத்து நல்லாட்சி ஒன்றை மலரச்செய்வோம் என டிலான் பெரேரா தெரிவித்தார்.

## பொது விவாதத்துக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு நிதி அமைச்சர் மங்கள சமரவீர அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பை அவர் தனது ருவிட்டர் ஊடாக நேற்று மாலைவிடுத்தார். தேசிய கடன் தொடர்பிலேயே பகிரங்க விவாதம் நடத்த வருமாறு நிதி அமைச்சர் மங்கள சமரவீர, மகிந்த ராஜபக்சவுக்கு இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

## கோத்தாவுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளது.

இலங்கை மற்றும் அமெரிக்க நாடுகளின் குடியுரிமையை கொண்டுள்ள கோத்தபாய, அமெரிக்க குடியுரிமையிலிருந்து விலகிக் கொள்ளும் விண்ணப்பத்தை சமர்ப்பித்திருந்தார்.

இந்நிலையில் அமெரிக்காவின் குடியேற்ற மற்றும் தேசிய சட்டத்தின் கீழுள்ள சில சிறப்பு விதிகளின் கீழ் கோத்தபாயவின் குடியுரிமையை நீக்க முடியாது என அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

2020ம் ஆண்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிடத் தீர்மானித்துள்ளார்.

இலங்கையில் நடைமுறையிலுள்ள அரசியலமைப்பு திருத்த சட்டத்திற்கமைய சமர்ப்பிக்கப்பட்ட 19வது திருத்தத்தின் கீழ் இரட்டை குடியுரிமை கொண்ட நபர் ஒருவர் தேர்தலில் போட்டியிட முடியாது.

அதற்கமைய எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் எதிர்பார்ப்பில் தனது அமெரிக்க குடியுரிமையை நீக்கிக் கொள்ளுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொதுஜன பெரமுனவினால் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக உறுதி செய்ய வேண்டிய நிலையில், அதற்கு முன்னரே தனது பிரசார நடவடிக்கைகளை வியத்மக அமைப்பின் மூலம் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தனி வழியில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சுதந்திரமான உறுப்பினராகச் செயற்படவுள்ள அதே வேளை, அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாட்டாளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் செயற்பாடுகளை தாம் அம்பலப்படுத்தப் போவதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

## புலிகளின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவலின் அடிப்படையில் பொலிஸாரும் அதிரடிப் படையினரும் இணைந்து நேற்று காலை நிலத்தை அகழும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

எனினும் நேற்று பிற்பகல் வரைக்கும் நடைபெற்ற இந்த அகழ்வு நடவடிக்கையின்போது அங்கிருந்து எந்தவொரு ஆயுதங்களும் மீட்கப்படாத நிலையில் அகழ்வு பணிகள் நிறைவுக்கு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வடக்கில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தவேலைகள் இடம்பெறவுள்ளதால் இந்தத் தடை ஏற்படும் என இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய அலுவலகம் பாவனையாளர்களுக்கு அறிவித்துள்ளது.

## கர்நாடக முதலமைச்சர் இன்று பதவியேற்பு!



பெங்களூர், மே 23

கர்நாடக முதலமைச்சராக மதச் சார்பற்ற ஜனதா தளம் கட்சியைச் சேர்ந்த குமாரசாமி, பெங்களூரில் இன்று பதவியேற்க உள்ளார்.

கர்நாடகாவில் சமீபத்தில் நடந்த தேர்தலில், பா.ஜ.க 104 இடங்களையும், காங்கிரஸ் 78 இடங்களையும் மதச்சார்பற்ற ஜனதா தளம் 37 இடங்களையும் கைப்பற்றின. தனிப் பெருங்கட்சியான பா.ஜ.க சார்பில் முதலமைச்சராகப் பதவியேற்ற எடியூரப்பா, சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்கும் முன் பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து, மதச் சார்பற்ற ஜனதா தளத்துடன் காங்கிரஸ் இணைந்து ஆட்சி அமைத்தது. இந்தப் பதவியேற்பு விழாவில் பல்வேறு மாநிலக் கட்சித் தலைவர்களையும் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஆ)

## புதிய பரிணாமத்தில் 'பிக் பாஸ் -2'




சென்னை, மே 23

தமிழ்த் தொலைக்காட்சி வரலாற்றில் பிரம்மாண்டமான நிகழ்ச்சி என்று சொல்லுமளவுக்குக் கடந்த ஆண்டு, விஜய் டிவியில் ஒளிபரப்பான 'பிக் பாஸ்' நிகழ்ச்சி அமைந்தது. நடிகர் கமல்ஹாசன் அந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கியமையால், நிகழ்ச்சியைப் பலரும் கண்டு இரசித்தனர். அடுத்தவர் வீட்டில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் அனைவருக்குமே உண்டு. அதுவே இந்த நிகழ்ச்சி அதிக வரவேற்பைப் பெற்றமைக்குக் காரணமாகவும் அமைந்தது.

இப்போது பிக் பாஸ் சீசன் 2 க்கான வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. ஜூன் மாதம் இந்த இரண்டாவது சீசன் ஆரம்பமாகும் எனத் தெரிகிறது. இதற்காக கமல்ஹாசன் பங்கேற்ற முன்னோட்டம் நேற்றுமுன்தினம் இரவு முதல் ஒளிபரப்பானது. இந்த முன்னோட்டம் யு டியூபில் மட்டும் 8 இலட்சம் பார்வையாளர்களைக் கடந்துள்ளது.

இந்த இரண்டாவது சீசனிலும் 15 பிரபலங்கள் பங்கேற்க உள்ளதாகவும், அவர்களை 60 கமராக்கள் கண்காணிக்க உள்ளதாகவும் முன்னோட்டத்தில் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார். 'ஆனால், எத்தனை நாட்கள் தங்கப் போகிறார்கள் என்பதை அவர் குறிப்பிடவில்லை. முதல் சீசனில் 30 கமராக்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டன. இந்த சீசனில் கூடுதலாக 30 கமராக்கள் உள்ளன. இந்த சீசன் 2 இல் சில மாற்றங்கள் இருக்கும் எனத் தெரிகிறது. பூந்தமல்லியில் உள்ள அதே தனியார் கலையகத்தில் புதுப் பொலிவுடன் பிக் பாஸ் வீட்டை நிர்மாணிக்கும் வேலைகள் நடந்து வருகிறதாம். முதல் சீசன் வீட்டை விட இரண்டாவது சீசன் வீடு மிகவும் பிரமாண்டமாக உருவாக்கப்பட்டுள்ளதாம். வீட்டில் மட்டும் மாற்றமில்லை நிகழ்ச்சியிலும் நிறைய மாற்றங்கள் இடம் பெற இருக்கிறதாம். இந்த சீசனில் யார் யாரெல்லாம் கலந்து கொள்ளப் போகிறார்கள் என்பது குறித்து இப்போதே சமூக வலைத் தளங்களில் ஒரு பட்டியல் ஓடிக் கொண்டிருக்கிறது. ஆனால், விஜய் டிவி தரப்பில் அதை இரகசியமாகவே வைத்திருக்கிறார்கள். (ஆ)



# ஏமனில் ஏவுகணைத் தாக்கு: அப்பாவி மக்கள் பலர் சாவு!

சனா, மே 23

ஏமன் நாட்டில் ஹவுத்திப் புரட்சிப் படையினர் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில், பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர் என்று சவுதி அரச ஊடகத்தில் செய்தி வெளியாகி உள்ளது.

ஏமன் நாட்டில் பதவியிறக்கம் செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவாளர்கள், தற்போதைய ஜனாதிபதி அப்த் ரப்போ மன்சூர் ஹாதியின் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 2014 ஆம் ஆண்டு இந்தக் கிளர்ச்சி, ஆயுதப் போராட்டமாகத் திசைமாறியது.


ஏமன் நாட்டின் அண்டை நாடான ஈரானின் ஆதரவுடனும், அல் கொய்தா பயங்கரவாதிகளின் துணையுடனும் உள்நாட்டுக் ஹவுத்திப் புரட்சிப் படையினர் தலைநகர் சனா உள்ளிட்ட பல பகுதிகளைக் கைப்பற்றித் தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

இந்தப் பகுதிகளை மீட்பதற்காக சவுதி அரேபியா தலைமையிலான அரபு நாடுகளின் கூட்டுப் படைகள் ஏமன் அரசுக்கு உதவிசெய்து வருகின்றன.

இந்த நிலையில், ஏமன் நாட்டில் உள்ள மரிப் நகரின்மீது ஹவுத்திப் படை ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தியது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டிருப்பதாகச் செய்தி வெளியாகி உள்ளது. எனினும், சேத விபரங்கள் முழுமையாக வெளியிடப்படவில்லை. (ஆ)

## காதலியை வாழ்த்த பல்கலை இணையத்தை முடக்கிய ஹக்கர்




புதுடெல்லி, மே 23

புதுடில்லி ஜமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைகழக இணையதளத்தை முடக்கி, மர்ம நபர் ஒருவர் தான் காதலிக்கும் பெண்ணுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ஜமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைகழகம் டில்லியில் அமைந்துள்ளது. இந்தப் பல்கலைகழகம் 1920ஆம் ஆண்டு இந்திய விடுதலைக்காகப் போராடிய முஸ்லிம் தலைவர்களால் தொடங்கப்பட்டது. கடந்த 1988 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இந்தப் பல்கலைக் கழகத்துக்கு மத்திய பல்கலைகழகம் அந்தஸ்து அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், இந்த பல்கலைக் கழகத்தின் இணையதளமான jmi.ac.in-I நேற்று முடக்கப்பட்டுள்ளது. இணையத் தளத்தை முடக்கிய அந்த நபர் தான் காதலிக்கும் பூஜா என்ற பெண்ணுக்குப் பிறந்தநாள் வாழ்த்துக் கூறியுள்ளார்.

இணையதளத்தை சரிசெய்யும் முயற்சியில் பல்கலைகழகம் ஈடுபட்டுள்ளது. (ஆ)

## வெனிசுலாவுக்கு எதிராக புதிய பொருளாதாரத் தடை

### அமெரிக்கா அதிரடி



வொஷிங்டன், மே 23

சமீபத்தில் நடைபெற்ற வெனிசுலா ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் நிக்கோலஸ் மதுரோ வென்றுள்ளார். இந்த நிலையில், வெனிசுலா நாட்டின் மீது புதிய பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்துள்ளது.

வெனிசுலாவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மோசடி நடைபெற்றதாகக் கூறி, முக்கிய எதிர்க்கட்சி தேர்தலைப் புறக்கணித்தது. இதனை அடுத்து, ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மீண்டும் வெற்றி பெற்றார்.

இந்தத் தேர்தல் தொடர்பாக அமெரிக்கத் துணை ஜனாதிபதி மைக் பென்ஸ், 'வெனிசுலா ஜனாதிபதி தேர்தல் போலியான ஒன்று. சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடைபெறவில்லை. முறைகேடாக நடைபெற்ற இந்தத் தேர்தல், வெனிசுலாவின் புனிதமிக்க ஜனநாயகக் கலாசாரத்தை தகர்த்துள்ளது' எனத் தெரிவித்துள்ளார்.

முறைகேடான இந்தத் தேர்தலுக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவிப்பதாகவும், இந்தத் தேர்தல் அரசியலமைப்பின் ஒழுங்கை குலைப்பதாகவும் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்பியோ தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், அமெரிக்காவில் இருந்து வெனிசுலாவுக்கான பொருளாதாரப் பரிவர்த்தனைகள் மற்றும் இதர ஒப்பந்தங்களுக்கும் தடை விதித்து அந்த நாட்டின் மீது புதிய பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளார்.

மேலும், அமெரிக்க நிறுவனங்களில் 50 சதவிகிதத்துக்கும் மேலான வெனிசுலா அரசின் பங்குகள், விற்பனை, பரிமாற்றங்கள் போன்றவற்றுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (ஆ)

## கடும் நிபந்தனைகளுடன் ஈரானுடன் ஒப்பந்தம்

### அமெரிக்கா தயாராம்



வொஷிங்டன், மே 23

ஈரானுடன் 2015 ஆம் ஆண்டில் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் இருந்து, சமீபத்தில் விலகிய அமெரிக்கா தற்போது மீண்டும் அந்த நாட்டுடன் 12 கடுமையான நிபந்தனைகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது.

2015 ஆம் ஆண்டில் வல்லரசு நாடுகளுடன் ஈரான் அணுசக்தி ஒப்பந்தம் செய்துகொண்டது. ஆனால், இந்த ஒப்பந்தத்தை ஈரான் மீறிவருவதாகக் கூறி வந்த அமெரிக்கா, சமீபத்தில் இதில் இருந்து விலகியது. இதனால், ஈரான் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதிக்கவும் அமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருகிறது.

"வரலாற்றில் இல்லாத அளவுக்கு ஈரான் மீது தடை விதிக்கும் பணியில் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது. எங்களுடைய தீவிரம் குறித்து ஈரான் தலைவர்களுக்குச் சந்தேகமே வரக்கூடாது. ஈரான் மீதான புதிய அமெரிக்கக் கொள்கையைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறோம். 12 கடுமையான நிபந்தனைகளுடன் ஈரான் உடன் ஒப்பந்தம் செய்து கொள்வது போன்ற அம்சங்களும் அதில் இடம்பெற்றுள்ளன" என்று அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர் மைக் போம்பியோ தெரிவித்துள்ளார். (ஆ)

# நிலவை ஆய்வு செய்யும் சீன செயற்கைக்கோள்

பீஜிங், மே 23

நிலவின் இருண்ட பகுதிகள் தொடர்பில் ஆய்வு செய்வதற்காகப் புதிய செயற்கைக் கோளை சீனா நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி உள்ளது.

நிலவின் இருண்ட பகுதிகள் இதுவரை ஆய்வுகள் மூலம் அதிக உண்மைகள் அறியப்படாத மர்மம் நிறைந்த இடங்களாக உள்ளன. இங்கு முதல் முறையாக ஆய்வுகளை மேற்கொள்ள சீனா திட்டமிட்டிருந்தது.

அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் வகையில், அந்த நாடு வடிவமைத்த 'குயீகியாவ்' செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

400 கிலோ நிறை கொண்ட அந்த செயற்கைக்கோள், நிலவை 3 ஆண்டுகளாகச் சுற்றி வந்து ஆய்வுகள் மேற்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.


சீனாவின் லோங் மார்ச்-4 சி ரொக்கெட் மூலம் அந்த ஆய்வுக் கலம் ஷிசாங் ஏவுதளத்தில் இருந்து உள்ளூர் நேரப்படி அதிகாலை 5.28 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டதாக சீன தேசிய விண்வெளி ஆய்வு அமைப்பு தெரிவித்தது.

ரொக்கெட் விண்ணில் பாய்ந்த 25 நிமிடங்களுக்குப் பிறகு, தனியாகப் பிரிக்கப்பட்ட செயற்கைக்கோள் நிலவை நோக்கிய பயணத்துக்கேற்ற சுற்றுவட்டப் பாதையை அடைந்தது.

பூமிக்கும் நிலவுக்கும் இடையிலான சுற்றுவட்டப் பாதையில் பூமிக்கு 4,55,000 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இரண்டாவது சுழி ஈர்ப்புப் புள்ளியை இந்த செயற்கைக் கோள் அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அது நிறைவேறினால் அந்தப் புள்ளியை அடைந்த முதல் தகவல் தொடர்பு செயற்கைக் கோளாக குயீகியாவ் திகழும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

# பிளஸிஸ் அசத்தல் இறுதிக்கு சென்னை



மும்பை,மே 23

பிளஸிஸின் அதிரடி வேட்டையால், தோல்வியின் விளிம்பிலிருந்து மீண்டெழுந்து இறுதிப்போட்டிக்கு முன்னேறியது சென்னை சூப்பர் கிங்ஸ் அணி. நேற்று நடைபெற்ற தகுதி பெறும் போட்டியில், ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணியும், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற டோனி முதலில் களத்தடுப்பைத் தேர்ந்தெடுத்தார்.

ஹைதராபாத் அணியில், தவான், கோஸ்வாமி ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களம் இறங்கினார்கள். முதல் ஓவரை தீபக் சாஹ வீசினார். முதல் பந்திலேயே சன்ரைசர்ஸ் அணிக்கு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. சாஹ வீசிய பந்தில் தவான் போல்டானார். அடுத்து கேன் வில்லியம்சன் களம் இறங்கி, அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி, அந்த ஓவரின் கடைசி 3 பந்துகளையும் பவுண்டரிக்கு விரட்டினார்.

ஆட்டத்தின் 4 ஆவது ஓவரில் கோஸ்வாமி 12 ஓட்டங்கள் எடுத்த நிலையில் லுங்கி நிகிடி பந்தில் வெளியேறினார். அடுத்த ஓவரில் 15 பந்தில் 24 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வில்லியம்சனும் ஆட்டமிழந்தார். இவரது விக்கெட்டை சர்துல் தாகூர் கைப்பற்றியிருந்தார்.

அதன்பின் சன்சரைசர்ஸ் ஐதராபாத்தின் விக்கெட்டுக்கள் மளமளவெனச் சரிந்தன. சாகிப் அல் ஹசன் 12, மணிஷ் பாண்டே 8,யூசுப் பதான் 24 ஓட்டங்களோடும் வெளியேறினார்கள். ஆயினும் ப்ராட்வைட் கடைசிக்கட்டத்தில் காட்டிய வானவேடிக்கையில், சன்ரைசர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில், 7 விக்கெட் இழப்புக்கு 139 ஓட்டங்களை எடுத்தது. ப்ராட்வைட் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

140 என்பது சென்னை அணிக்கு மிக இலகுவான இலக்காகவே இருக்குமெனக் கருதப்பட்டது. ஆனால் அந்தக் கணிப்பை பொய்யாக்குவது போல, அபாரமாகப் பந்து வீசி, சென்னை அணிக்கு மரணபயத்தைக் காட்டியது சன்ரைசர்ஸ் அணி. அந்த அணியின் பந்து வீச்சில் முன்னணி வீரர்கள் வீழ்த்தப்பட, ஓட்ட வேகமும் மந்தமாகியது. ஆனால் ஒருமுனையில் தூணாக நின்ற டு பிளஸிஸ் தனியாளாகப் போராடி, சென்னை அணிக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்து, இறுதிப்போட்டிக்கு அழைத்துச் சென்றார். சென்னை அணியின், வட்சன் 0, ரெய்னா 22, அம்பதி ராயுடு 0, டோனி 9, பிராவோ 7, ஜடேஜா 3, சாஹர் 10, ஹர்பஜன் சிங் 2, தாகூர் 15 ஓட்டங்களை எடுக்க, பிளஸிஸ் ஆட்டமிழக்காது 67 ஓட்டங்களை எடுத்து ஆட்ட நாயகனானார். சென்னை அணி, 8 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# ஜடேஜாவின் மனைவிக்கு பளார் விட்ட கான்ஸ்டபிள்

குஜராத்,மே 23

சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வீரர் ரவீந்திர ஜடேஜாவின் மனைவி ரீவா, குஜராத் மாநிலம் ஜாம் நகரின் சாரு செக்ஷன் சாலையில் நேற்று காரில் பயணம் செய்து கொண்டிருந்தார். அப்போது கான்ஸ்டபிள் ஓட்டிச் சென்ற மோட்டார்பைக்கை கார் உரசியது. இதில் ஆத்திரமடைந்த கான்ஸ்டபிள், ரீவாவின் தலைமுடியை கொத்தாக பற்றி தரதரவென வெளியே இழுத்து நடுவீதி என்றும் பாராமல் பளார், பளார் என ரீவாவை அறைந்தார்.

இதைக் கண்ட பொது மக்கள், அச்சத்திலும், அதிர்ச்சியிலும் உறைந்தனர். எனினும் சுதாரித்துக் கொண்ட பலரும் ஓடிச் சென்று பொலிஸ்காரரை மேலும் தாக்க விடாமல் மடக்கிப் பிடித்து பொலிஸாருக்கு தகவல் அளித்தனர். தாக்குதல் தொடுத்த கான்ஸ்டபிள் சஜய் ஆஹிரை கைது செய்துள்ளதாகவும், கருணையின்றி நடந்து கொண்ட அவர் மீது மிகவும் கடுமையான நடவடிக்கை பாயும் என்றும் எஸ்.பி பிரதீப் செஜூள் தெரிவித்துள்ளார்.

பிரபல கிரிக்கெட் வீரராகவும் தற்போது ஐபிஎல் போட்டிகளில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காகவும் ஆடி வரும் ஜடேஜாவின் மனைவி மீது பொலிஸ் உத்தியோகத்தர் அரங்கேற்றிய கொடூர தாக்குதல் அனைத்து தரப்பிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# ஆர்ஜன்ரீன அணி அறிவிப்பு



புயூனஸ்,மே 23

ரஷ்யாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பிபா உலகக்கிண்ண போட்டிகளுக்கான 23 பேர்கொண்ட ஆர்ஜன்ரீன குழாம் அறிவிக்கப்பட்டள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள குழாமில் லைனல் மெஸ்ஸி, சேர்ஜியோ ஆகுவாரோ, பவுலோ டெய்பலா மற்றும் கொன்சலா ஹிகுவாயின் உட்பட முன்னணி வீரர்கள் அணியில் இணைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் சீரிஸ் ஏ தொடரில் அதிக கோல் அடித்துள்ள இன்டர் மிலன் அணியின் மௌரோ ஐகார்டி அணியில் இணைக்கப்படவில்லை.

இதேவேளை மென்செஸ்டர் சிட்டி அணியின் ஆகுவாரோ மற்றும் நிகொலஸ் ஒட்டடெண்டே உட்பட ஆறு பிரீமியர் லீக் வீரர்களும் அணியில் இணைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் சீரிஸ் ஏ தொடரின் 34 போட்டிகளில் விளையாடிய ஐகார்டி 29 கோல்களை அடித்திருந்தும் அணியில் இணைக்கப்படாமை பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

ஆர்ஜன்ரீன அணி உலகக்கிண்ணத்தின் முதல் போட்டியில் ஐஸ்லாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது.

**ஆர்ஜன்ரீன அணிக்குழாம்**

**கோல் கீப்பர்ஸ்**

சேர்ஜியோ ரொமிரோ, வில்லி கெபல்லாரோ, பிரான்கோ அமானி

**டிபெண்டர்ஸ்**

கப்ரியல் மெர்கடோ, நிக்கோலா ஒஸ்மண்டி, மார்கோஸ் ரோஜோ , நிகோலாஸ் டாக்லஃபிகோ, ஜேவியர் மஸ்செரெரோ, மார்கோஸ் அகுவானா, கிறிஸ்டியன் அன்சால்டி

**மிட்பீல்டர்ஸ்**

எவர் பெனேகா, லூகஸ் பிக்லியா, என்கல் டி மரியா, ஜியவோனி லோ செல்ஸோ, மானுவல் லான்ஜிஂி, கிறிஸ்டியன் பேவன், மாக்சிமில்லனோ மெஸ்ஸா, எட்வர்டோ சால்வியோ

**போர்வர்ட்ஸ்**

லைனல் மெஸ்ஸி, கொன்சலா ஹிகுவாயின், சேர்ஜியோ ஆகுவாரோ, பவுலோ டெய்பலா.

# இலங்கை வீரர்களின் சம்பளம் அதிகரிப்பு

கொழும்பு,மே 23

2018-19 ஆண்டுக்கான இலங்கை தேசிய கிரிக்கெட் அணி வீரர்களின் சம்பளம் 34 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அதிக அளவு இலாபம் அடைந்ததால் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக கிரிக்கெட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

ஒப்பந்த வீரர்கள் 33 பேரை தவிர டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளிலும் விளையாடும் அனைத்து வீரர்களுக்கான கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஒப்பந்த வீரர்கள் A, B, C, D மற்றும் பிரீமியர் என பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளனர்.

# இலங்கை கிரிக்கெட்டை தூய்மைப்படுத்த முன்னாள் வீரர்கள் “ரெடி”

கொழும்பு,மே.23

இலங்கை கிரிக்கெட்டை தூய்மைப்படுத்துவதற்காக இலங்கை கிரிக்கெட்டின் நிர்வாகத்தை பொறுப்பேற்பதற்கு முன்னாள் வீரர்கள் பலர் தயாராகவுள்ளனர் என முன்னாள் வீரர் பிரமோதய விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முத்தையா முரளிதரன், ரொசான் மகநாமா, சிடத்வெட்டி முனி உட்பட பல வீரர்கள் இலங்கை கிரிக்கெட்டை தூய்மைப்படுத்தும் நடவடிக்கையை பொறுப்பேற்க தயார் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட்டின் தலைவிதியை தீர்மானிப்பதற்கு பல முன்னாள் வீரர்கள் விரும்புகின்றனர். இலங்கை கிரிக்கெட்டில் பணியாற்றும் சில முன்னாள் முக்கிய வீரர்களும் இதில் உள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது அவர்கள் மௌனமாக உள்ளனர் ஆனால் அவர்கள் விரைவில் தங்கள் மௌனத்தை கலைப்பார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தற்போதைய தேர்தல் முறையை சில அரசியல்வாதிகளும் நிர்வாகிகளும் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்துகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலில் முக்கிய பதவிகளை வகிப்பவர்கள் இவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கு உதவுகின்றனர் எனவும் பிரமோதய விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 23.05.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.